FWC

# வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, நவம்பர்- 2016

## Term Examination, November - 2016

| தரம் :- 13 (2017) | வணிகக்கல்வி – I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள்:-**

சுட்டெண் :....................................

- எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- 01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| 01 - 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

01) நவீன தொடர்பாடல் தொழில்நுட்ப இயந்திர உபகரணங்களின் ஊடே இன்றைய சமூக வலைத்தளப் பக்கங்களின் இயங்கு திறனை மேலும் அதிகரித்துக் கொள்ள முடியும். இவ்வாறான தொடர்பாடல் தொழில்நுட்ப இயந்திர உபகரண உற்பத்தி ஒரு,

(1) முதன்னிலை உற்பத்தி
(2) இரண்டாம் நிலை உற்பத்தி
(3) முதன்னிலை அல்லது கைத்தொழில்துறை
(4) மூன்றாம் நிலை அல்லது சேவைத்துறை
(5) இரண்டாம் நிலை அல்லது கைத்தொழில்துறை (..........)

02) பின்வருவனவற்றுள் ஆரம்பத்திலிருந்தே பூகோளச் சந்தையைக் குவிமையமாகக் கொண்டு உருவாக்கிய வணிகம் அல்லாதது எது?

(1) மின் அஞ்சல் (2) முகநூல் (3) மோட்டார் வாகனங்கள்
(4) வாட்சப் (5) ருவிற்றர் (..........)

03) மனிதனின் விருப்பங்கள் பல்வேறு வகைப்பட்டன. அவற்றை ஏற்படுத்துவதில் தாக்கத்தினை ஏற்படுத்தும் சமூக காரணி ஒன்றாக இருப்பது

(1) வருமான மட்டம் (2) நடை உடை பாவனை
(3) காலநிலைத் தன்மை (4) சம்பள வேறுபாடு
(5) பால் வேறுபாடு (..........)

04) பின்வரும் அட்டவணையில் பல்வேறு வகையான பொருள்களும், அவற்றின் பண்புகள் பலவும் காணப்படுகின்றன.

| பொருட்கள் | பண்புகள் |
|---|---|
| A - இலகு / வசதி | (1) விலையையும் குறியீட்டையும் ஒப்பிட்டுக் கொள்வனவு செய்யப்படும் |
| B - கடை | (2) எண்ணங்கள் நுகர்வாக இருக்காது |
| C - கைத்தொழில் | (3) ஒப்பிட்டறியாது தொடரந்து கொள்வனவு செய்வர் |

பொருட்களில் காணப்படும் பண்புகளைச் சரியாகப் பொருத்தும் போது அமையும் விடை

(1) $A-1,\ B-2\ ,\ C-3$ (2) $A-2,\ B-1\ ,\ C-3$
(3) $A-3,\ B-1\ ,\ C-2$ (4) $A-2,\ B-3\ ,\ C-1$
(5) $A-3,\ B-2\ ,\ C-1$ (..........)

05) பின்வரும் அட்டவணையானது சில பேரண்டச்சூழல் காரணிகளையும் அக்காரணிகளுக்கான உதாரணங்களையும் எடுத்துக் காட்டுகின்றது.

| பேரண்ட சூழல் காரணிகள் | உதாரணங்கள் |
|---|---|
| $A$ - இயற்கைச் சூழல் | (1) தன்னியக்க இயந்திரங்களின் நவீன அபிவிருத்தி |
| $B$ - தொழில்நுட்பச் சூழல் | (2) மூலப்பொருட்கள் அருகி வருதல் |
| $C$ - பொருளியல் சூழல் | (3) உலக எண்ணெய் விலை அதிகரிப்பு |
| $D$ - சமூக கலாச்சார சூழல் | (4) மதங்களுக்கிடையிலான நல்லிணக்கம் |
| $E$ - மக்கட் சூழல் | (5) நாடு கடந்த குடியேற்றம் |

பேரண்டசூழல் காரணிகளுக்கு பொருந்தக்கூடிய உதாரணங்களைச் சரியாகக் கொண்ட தொகுதி எது?

(1) $A-2$, $B-1$, $C-3$, $D-4$ $E-5$
(2) $A-3$, $B-2$, $C-1$, $D-5$ $E-4$
(3) $A-5$, $B-3$, $C-2$, $D-4$ $E-1$
(4) $A-1$, $B-4$, $C-5$, $D-3$ $E-2$
(5) $A-4$, $B-5$, $C-2$, $D-1$ $E-3$ (..........)

06) வணிகமொன்றில் அகச்சூழலில் ''பலம்'' என்பதனை தோற்றுவிக்கக்கூடிய ஒழுக்க நெறியாகக் கருதக்கூடியது

(1) சமூகமட்ட நிகழ்வுகளுக்கு அனுசரணை வழங்குதல்.
(2) சகல ஊழியர்களையும் சமமாக நடாத்துதல்.
(3) சமயக் குறியீடுகளை வணிக நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தாதிருத்தல்.
(4) முதியோரைக் கனம் பண்ணுதல்.
(5) விளம்பரப்படுத்தலின் போது ஏனைய வணிகங்களின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்தா திருத்தல். (..........)

07) பின்வரும் அட்டவணையில் வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்களும் $(x)$, அவ்வாறு அக்கறை செலுத்துவதற்கான காரணங்களும் $(y)$ தரப்பட்டுள்ளன.

| அக்கறை செலுத்தும் பிரிவினர் $(x)$ | அக்கறை செலுத்தும் காரணிகள் $(y)$ |
|---|---|
| $A$ - உரிமையாளர் | (1) பிணைகள் பாதுகாப்புடையது |
| $B$ - முகாமையாளர் | (2) கடனை மீள அறவிட்டுக் கொள்ளல் |
| $C$ - ஊழியர்கள் | (3) சந்தைப் பங்கு |
| $D$ - வழங்குனர்கள் | (4) தொழில் திருப்தி |
| $E$ - கடன் வழங்குனர் | (5) கடந்தகால தீர்மானங்களின் வெற்றி |

$x, y$ யினை பொருத்தும்போது சரியாக அமையும் விடைத் தொகுதி எது?

(1) $A-4$, $B-1$, $C-2$, $D-3$ $E-5$
(2) $A-3$, $B-4$, $C-1$, $D-5$ $E-2$
(3) $A-2$, $B-5$, $C-3$, $D-1$ $E-4$
(4) $A-1$, $B-2$, $C-3$, $D-4$ $E-5$
(5) $A-3$, $B-5$, $C-4$, $D-2$ $E-1$ (..........)

08) பின்வருவனவற்றுள் வணிக வெளிமூலங்கள் (Business Outsourcing) எனக் கருதக்கூடிய நடவடிக்கை யாது?

(1) வைத்தியசாலையொன்று தனது சுத்திகரிப்பு பணியினை *X* என்ற நிறுவனத்திடம் ஒப்படைத்தல்.

(2) நிறுவன சிற்றுண்டிச்சாலைக்கு சிற்றுண்டி ஒன்றினை மட்டும் ஊழியர் ஒருவர் வீட்டிலிருந்து பெற்றுக் கொள்ளல்.

(3) நிறுவன பொதிகட்டல் பணிக்காக சில யுவதிகளை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தியிருத்தல்.

(4) உள்ளக கணக்காய்வு செயற்பாடுகளை மேலும் விஸ்தரித்தல்.

(5) பொருட் கொள்வனவுக்கு கூறுவிலை முறைமையில் சில மாற்றங்களை செய்தல். (..........)

09) பின்வருவனவற்றுள் மிகச் சரியான கூற்றினைத் தெரிவு செய்க.

(1) உத்தரவாதத்தால் வரையறுத்த கம்பனிகளின் அங்கத்தவர்களுக்கு பங்கிலாபம் வழங்கப்படுவதில்லை.

(2) ஒவ்வொரு தனிவியாபாரமும், பங்குடமைகளும் 1918 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க வியாபாரப் பெயர்பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்தல் கட்டாயமானதாகும்.

(3) பங்குடமை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பங்குடமையின் வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக பங்காளர்கள் ஊதியத்தைப் பெறுவதற்கு உரிமையுடையவர்கள் ஆவர்.

(4) இலங்கையின் கூட்டுறவு சங்கங்கள் இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையிடம் பதிவு செய்தல் கட்டாயமானதாகும்.

(5) வணிக முறைக்கான அங்கீகார வணிகம் தொடர்பில் அங்கீகாரம் பெற்றவர் முழுமையான சுதந்திரமுடையவர் ஆவர். (..........)

10) பின்வருவன வரையறுத்த கம்பனிகள் தொடர்பாக ஐந்து மாணவர்களினால் கூறப்பட்ட சில கூற்றுக்கள் ஆகும்.

A - நட்டப் பொறுப்பு வரையறுக்கப்படாததும், பங்குபரிமாற்றகத்தில் பட்டியலிடப்படுவதும்.

B - நட்டப் பொறுப்பு வரையறுக்கப்பட்டதும், பங்குபரிமாற்றகத்தில் பட்டியலிடப்படாததும்.

C - ஆகக்குறைந்த அங்கத்துவம் ஒன்று என்பதுடன், ஆகக்கூடியது ஐம்பது.

D - ஆகக்குறைந்த பணியாளர்கள் எண்ணிக்கை ஒன்று என்பதுடன், ஆகக்கூடியது வரையறையற்றது.

E - நட்டப் பொறுப்பு வரையறுக்கப்பட்டதும், பங்குபரிமாற்றகத்தில் பதிவு செய்யப்பட்டதும்.

மேற்குறித்த கூற்றுக்களில் வரையறுத்த சொந்தக் கம்பனிக்கு மட்டும் உரித்தான கூற்றுக்களை குறிப்பிட்ட மாணவர் யார்? அல்லது யாவர்?

(1) A மட்டும் (2) A யும் B யும் (3) C, D, E

(4) B, C, D (5) E மட்டும் (..........)

11) பின்வருவனவற்றுள் எது நபர் ஒருவர் கம்பனி ஒன்றின் பணிப்பாளராக வருவதற்கான தகுதியீனத்தை ஏற்படுத்தக்கூடியது?

(1) தனது சம்மதத்தை வழங்காதவராக இருத்தல்.

(2) இக்கம்பனியின் பங்குதாரராக இருத்தல்.

(3) இரட்டைப் பிரஜாவுரிமையினைக் கொண்டுள்ளவராக இருத்தல்.

(4) வேறொரு கம்பனியின் பணிப்பாளர் பதவியைக் கொண்டுள்ளவராக இருத்தல்.

(5) கடன்தீர்க்கும் ஆற்றலற்ற நிலையை அடையாதவராக இருத்தல். (..........)

12) முயற்சியாளர் ஒருவரின் மிகவும் முக்கியமான சிறப்பியல்புகளில் ஒன்று

(1) தொடர்பாடல் (2) முகாமைத்துவம் (3) அனுபவம்

(4) ஆர்வம் (5) கூட்டிணைப்பு (..........)

13) பின்வரும் அட்டவணையில் $X$ நிரலானது அங்கீகார வணிக வகையினையும், $Y$ நிரலானது அவற்றுக்கான எடுத்துக்காட்டுக்களையும் உள்ளடக்கியுள்ளது.

| **X** | **Y** |
|---|---|
| $A$ - உற்பத்தி அங்கீகார வணிகம் | (1) KFC<br>(2) CEYPETCO |
| $B$ - உற்பத்திப் பொருள் அங்கீகார வணிகம் | (3) PIZZA HUT<br>(4) Coca Cola |
| $C$ - வணிக முறைக்கான அங்கீகார வணிகம் | (5) PEPSI<br>(6) LANKA IOC |

$X$ இற்கும் $Y$ இற்கும் பொருத்தமான இணைப்பினைத் தெரிவு செய்க.

(1) $A-1,\ 3$ $B-4,\ 5$ $C-2,\ 6$
(2) $A-2,\ 6$ $B-1,\ 3$ $C-4,\ 5$
(3) $A-4,\ 5$ $B-2,\ 6$ $C-1,\ 3$
(4) $A-3,\ 5$ $B-1,\ 6$ $C-2,\ 4$
(5) $A-1,\ 6$ $B-3,\ 5$ $C-2,\ 4$ (..........)

14) வங்கிப் பணத்தின் பண்பு அல்லாதது
(1) வணிக வங்கிகளால் உருவாக்கப்படும்.
(2) சட்ட அங்கீகாரம் உடையது.
(3) சட்டப்பணத்துடன் ஒப்பிடுமிடத்து திரவத் தன்மை குறைந்தது.
(4) பரஸ்பர இணக்கத்துடன் கொடுக்கல் வாங்கல்களுக்கு பயன்படுத்த முடியும்.
(5) நடைமுறைக் கணக்கு அவசியம். (..........)

15) தன்னியக்க வங்கிச் சேவைகளின் மூலம் (Automated Banking Services) வாடிக்கையாளருக்கும், வங்கிக்கும் கிடைக்கும் அனுகூலமாகக் கருதக்கூடியதொன்று எது?
(1) நேரத்தைச் சேமிக்க முடிதல்.
(2) சேவை விரிவாக்கத்தின் மூலம் அதிக இலாபத்தினை உழைக்க முடிதல்.
(3) பட்டியல் கொடுப்பனவுகளை இலகுவாக செலுத்தக்கூடியதாக இருத்தல்.
(4) கணக்குகள் தொடர்பான தகவல்களை இலகுவாகப் பெறக்கூடியதாக இருத்தல்.
(5) கணக்குகளுக்கிடையே நிதிகளை மாற்றக்கூடியதாக இருத்தல். (..........)

16) ஒப்படைப்புப் பெறுமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கான உரித்தினை கொண்ட காப்புறுதி எது?
(1) தீக்காப்புறுதி
(2) கடலபாயக் காப்புறுதி
(3) மோட்டார் வாகனக் காப்புறுதி
(4) ஆயுள் காப்புறுதி
(5) உற்பத்திப் பொருள் பொறுப்புக் காப்புறுதி (..........)

17)

| **ஆவணங்கள்** | **வழங்கும் நிறுவனங்கள்** |
|---|---|
| $A$ - வாகன தகுதிச் சான்றிதழ் | (1) பிரதேச செயலாளர் காரியாலயம் |
| $B$ - வருமான அனுமதிப் பத்திரம் | (2) மோட்டார் வாகன பதிவுத் திணைக்களம் |
| $C$ - சாரதி அனுமதிப்பத்திரம் | (3) அரச அங்கீகாரமளிக்கப்பட்ட வேலைத்தளம் |
| $D$ - வீசா அனுமதிப்பத்திரம் | (4) தூதுவர் காரியாலயம் |
| $E$ - வார்நாமம் | (5) கப்பல் கம்பனி |

மேற்கூறிய அட்டவணையில் ஆவணங்களும் அவ்வாவணங்களை வழங்கும் நிறுவனங்களும் தரப்பட்டுள்ளன. இவற்றை சரியாகப் பொருத்தின்

(1) $A-1,$ $B-4,$ $C-3,$ $D-2$ $E-3$
(2) $A-2,$ $B-1,$ $C-3,$ $D-5$ $E-2$
(3) $A-3,$ $B-1,$ $C-2,$ $D-4$ $E-5$
(4) $A-4,$ $B-2,$ $C-1,$ $D-1$ $E-5$
(5) $A-5,$ $B-3,$ $C-4,$ $D-2$ $E-1$ (..........)

18) பாடசாலை ஒன்றின் அதிபர், தமது கல்லூரியின் நூற்றாண்டு விழா தொடர்பில் அக்கறையுடைய தரப்பினருடன் விரிவான தகல்களை தொடர்பாடல் செய்ய விரும்புகின்றார். பின்வருவனவற்றுள் இந்நோக்கத்திற்கு மிகப் பொருத்தமான தொடர்பாடல் முறை யாது?

(1) எழுத்திலான ஒரு ஞாபகக் குறிப்பு (Memo)

(2) நேருக்கு நேரான கூட்டம் (Meeting)

(3) அறிவித்தற் பலகை (Notice board)

(4) தொலைபேசி (Telephone)

(5) ஆள் குறித்த கடிதம் (Personal Letter) (..........)

19) சட்டவிரோதமான முறையில் செயற்பட்டுக் கொண்டிருந்த தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றினை அரசு தடைசெய்கின்றது. இத்தடையுடன் தொடர்புபட்ட அரச நிறுவனம் எது?

(1) இலங்கை ரெலிகொம்

(2) இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்

(3) இலங்கைத் தொலைத் தொடர்புகள் ஆணைக்குழு

(4) கம்பனி பதிவாளர் அலுவலகம்

(5) தபால் தந்தி எண்மான உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு (..........)

20) பின்வருவனவற்றுள் அமைப்பொன்றின் வினைதிறனுடன் தொடர்புடைய ஒரு செயற்பாட்டுக் காரணி யாது?

(1) போட்டிக்கு முகம் கொடுக்கும் ஆற்றல்.

(2) திட்டங்களை முறையாகத் தீட்டுதல்

(3) சூழலுடன் இசைவுறுதல்

(4) சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றல்

(5) வளவிரயங்களைக் குறைத்தல் (..........)

21) முகாமையாளர்களை வகைப்படுத்தும் அடிப்படைகளும் அவற்றுக்கான உதாரணங்களும் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| *X* | *Y* |
|---|---|
| *A* - அதிகார அடிப்படையில் | (1) தகவல் முகாமையாளர் |
| *B* - தொழிற்பாட்டினடிப்படையில் | (2) மத்திய முகாமையாளர் |
| *C* - பொறுப்பினடிப்படையில் | (3) முன்வரிசை முகாமையாளர் |

$X$ ஐயும், $Y$ ஐயும் சரியாகப் பொருத்தும் பொழுது மிகச்சரியாக அமையும் விடைத்தொகுதியாக இருப்பது

(1) $A-3$ $B-2$ $C-1$

(2) $A-1$ $B-3$ $C-2$

(3) $A-2$ $B-3$ $C-1$

(4) $A-2$ $B-1$ $C-3$

(5) $A-3$ $B-1$ $C-2$ (..........)

22) பாடசாலை ஒன்றில் பொருளியல் ஆசிரியரான திரு. றெஜி தனது துறைசார்ந்த வகையில் ஆழமான அறிவு, திறன்களைக் கொண்டிருப்பதுடன், மாணவர்களைக் கற்கத்தூண்டும் வகையில் நடவடிக்கைகளை முன்னெடுப்பார். இவரிடம் நிறைந்துள்ள வலுக்கள் (Power) முறையே

(1) நிபுணத்துவ வலுவும், வெகுமதியளிக்கும் வலுவும்

(2) ஆளுமை வலுவும், செல்வாக்குச் செலுத்தும் வலுவும்

(3) சட்டரீதியான வலுவும், தகவல் வலுவும்

(4) அனுசரணை வலுவும், ஆளுமை வலுவும்

(5) அனுசரணை வலுவும், தகவல் வலுவும் (..........)

23) முகாமையாளர்களிடம் எக்காரணங்களுக்காக மானிடத்திறன் முக்கியமானதாகக் காணப்படுகின்றது.
(1) நாளாந்த வணிக நடவடிக்கைகளின் வெற்றிக்காக
(2) தீர்மானங்கள் தொடர்பில் சிறந்த அமுல்படுத்தல்களுக்காக
(3) நபர்களுக்கிடையேயான (ஆளிடை) தொடர்புகளைக் கட்டியெழுப்புவதற்காக
(4) நீண்டகால தந்திரோபாயத் தீர்மானங்களை மேற்கொள்வதற்காக
(5) கீழ்மட்ட முகாமையாளர்களை மேற்பார்வை செய்வதற்காக (..........)

24) நிறுவன அமைப்பொன்றிலிருந்து ஓய்வுபெற்றுச் செல்லும் முகாமையாளர் ஒருவரது கடந்தகால செயற்பாட்டுப் பண்புகள் சிலவற்றை பிரியாவிடை நிகழ்வில் தொழிற்சங்கத் தலைவர் பின்வருமாறு பட்டியலிட்டு உரையாற்றுகின்றார். இவர் ஒரு
A - நிறுவன நிகழ்வுகளை சிறப்பாகத் தலைமைதாங்கி நடாத்தக்கூடியவர்
B - நிறுவன வாடிக்கையாளருடன் நல்ல உறவினைப் பேணுபவர்
C - ஊழியர்களது திறன்களை மனம் நிறைந்து பாராட்டுபவர்
D - அதுமட்டுமன்றி ஊழியர் குறைநிறைகளையும் நேரடியாக எடுத்துக் கூறுபவர்
E - மேலும் ஊழியர்களது இல்லங்களில் நடைபெறும் நிகழ்வுகளிலும் தவறாது கலந்து கொள்பவர்
மேற்படி முகாமையாளரது கருமங்களினை ஹென்றி மின்ற்ஸ் பேர்க்கின் ஆளிடை வகிபாகத்தில் தலைவராக இருந்து ஆற்றும் பணிகள் என எவற்றை நீர் கருதுகின்றீர்?
(1) A மட்டும் (2) A யும் B யும் (3) C யும் D யும்
(4) A யும் E யும் (5) A யும் B யும் E யும் (..........)

25) குறிப்பான நோக்கங்களையும், குறிக்கோள்களையும் குவிமையப்படுத்தி உருவாக்கப்படுவது பின்வருவனவற்றுள் எதுவாகக் கருதப்படும்?
(1) திட்டமிடல் (2) ஒழுங்கமைத்தல் (3) நெறிப்படுத்தல்
(4) கட்டுப்படுத்தல் (5) முகாமைத்துவம் (..........)

26) பின்வரும் அட்டவணையில் உற்பத்தி முறைகளும் அவற்றுடன் தொடர்புடைய பண்புகள் சிலவும் காட்டப்பட்டுள்ளன.

| உற்பத்தி முறைகள | பண்புகள் |
|---|---|
| $A$- வேலை உற்பத்தி | (1) கிரயம் மிகக் கூடியதாக இருக்கும். |
| | (2) உற்பத்தி அளவு உயர்வாக இருக்கும். |
| $B$- தொகுதி உற்பத்தி | (3) சந்தையின் மொத்தக் கேள்வியில் அவதானம் செலுத்தப்படாதிருக்கும் |
| | (4) தொழிற் தேர்ச்சிக்கு முக்கிய இடம் கிடைக்கும் |
| $C$- பாய்ச்சல் உற்பத்தி | (5) நடுத்தரமான வளவிரயம் காணப்படும் |
| | (6) கிரயம் மிகக் குறைவாகக் காணப்படும் |

$X$ இற்கும் $Y$ இற்கும் பொருத்தமான இணைப்பினைத் தெரிவு செய்க.
(1) $A-1,\ 2$ $B-3,\ 4$ $C-5,\ 6$
(2) $A-2,\ 3$ $B-4,\ 5$ $C-1,\ 6$
(3) $A-1,\ 4$ $B-2,\ 6$ $C-3,\ 5$
(4) $A-1,\ 4$ $B-3,\ 5$ $C-2,\ 6$
(5) $A-5,\ 6$ $B-1,\ 2$ $C-3,\ 4$ (..........)

27) மறுகட்டளை மட்டம் பின்வருவனவற்றுள் எதற்குச் சமனாக அமையும்?
(1) பாதுகாப்பு இருப்பு + சரக்கிருப்பு
(2) பாதுகாப்பு இருப்பு + முதன்மைக்காலக் கேள்வி
(3) முதன்மைக்காலக் கேள்வி + சிக்கனக் கட்டளைக் கணியம்
(4) முதன்மைக்காலக் கேள்வி + சராசரி இருப்பு
(5) சிக்கனக் கட்டளைக் கணியம் + இழிவு இருப்பு (..........)

28) ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமங்கள் அடையப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு உற்பத்திகளினை தொடர்ச்சியாக பரிசோதனை செய்தல் தரக்கட்டுப்பாடாகும். பின்வருவன வற்றுள் தரக்கட்டுப்பாட்டு நுட்பமுறைகளினைக் கொண்ட தொகுதியினைத் தெரிவு செய்க.

(1) தொக்கட்டைமுறை, சரக்குமட்டமுறை, பூச்சிய வழு, *ABC* பகுப்பாய்வு
(2) தர உறுதி, கணனி செயற்திட்டமுறை, சரக்கு பேரேட்டுமுறை, மொத்தத்தர முகாமை
(3) பூச்சிய வழு, புள்ளிவிபரக் கட்டுப்பாடு, தரவட்டம், மொத்தத்தர முகாமை
(4) இரட்டைப்பாத்திரமுறை, *ABC* பகுப்பாய்வு, சரக்குமட்டமுறை, கணனி செயற்திட்டமுறை
(5) தரவட்டம், தர உறுதி, தரநியமம், சரக்குமட்டமுறை (..........)

29) பின்வரும் சந்தைப்படுத்தல் விளைவுகளில் இருந்து வாடிக்கையாளர்களுக்கு மட்டும் முக்கியமான தொகுதியினைத் தெரிவு செய்க.

A - உடமையாளர்கள் மற்றும் ஊழியர்களின் திருப்தியினை அதிகரித்தல்.
B - உற்பத்திப் பொருட்கள் மற்றும் சேவைகளின் எல்லைகள் விரிவாக்கப்படல்
C - சந்தையில் பொருட்கள் மற்றும் சேவைகள் தாராளமயமாதல்
D - வருமான சமமின்மை குறைதல்
E - சந்தை மீதான அறிவு விரிவடைதல்
F - பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பிலான கொள்வனவு இலகுவாதல்

(1) A B D (2) B E F (3) C D F (4) C E F (5) D E F (..........)

30) நுகர்வோரின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வது தொடர்பில் உற்பத்திப் பொருள் ஒன்றில் காணப்படும் ஆற்றல் அல்லது மதிப்பீடு எவ்வாறு அழைக்கப்படும்?

(1) தேவை (2) விருப்பம் (3) திருப்தி (4) பெறுமதி (5) தரம் (..........)

➢ **31 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி வெற்றிடங்களை நிரப்புக.**

31) அ) சந்தை இடம் (Market Place), சந்தை வெளி (Market Space) என்பவற்றின் மூலம் ........................................................................................................................ உருவாக்கப்பட முடியும்.

ஆ) வணிகமொன்றின் பேரினச் சூழலுக்கு மேலாக தாக்கத்தினை ஏற்படுத்தும் புறச்சூழல் தொகுதியாக ........................................................................................................ காணப்படுகின்றது.

32) அ) பேரினப் பொருளாதார நிலைப்பாட்டினைப் பாதுகாப்பதில் ........................................................ என்பதும், உள்நாட்டுப் பொருளாதாரத்தில் விலையினை நிலையாக பேணுவதில் ............................................................ என்பதும் பிரதான நோக்கங்களாக கொண்டியங்குகின்றன.

ஆ) நுகர்வுப் பொருள் ஒன்றின் உற்பத்திக்காக நுகரப்படும் பொருட்கள் ........................................... எனப்படுவதுடன், அது ..........................................................., ............................................................, ............................................................................................................. என வகைப்படுத்திக் கொள்ள முடியும்.

33) அ) பங்குடமையில் வயதடையா பங்காளனின் (Minar Partner) நட்டப் பொறுப்பு ............................................................ இருப்பதுடன், பெயரளவில் பங்காளின் (Noiminal Partner) நட்டப் பொறுப்பு ............................................................................................................ இருப்பதுண்டு.

ஆ) கம்பனியொன்றின் நட்டத்தில் முன்னுரிமையினையும், இலாபத்தில் பின்னுரிமையினையும் கொண்ட பங்குகள் ........................................................................................................, எனப்படுவதுடன் இலாபத்தில் முன்னுரிமையினையும் நட்டத்தில் பின்னுரிமையினையும் கொண்ட பங்குகள் ..................................................................................................................................... என்பதாகும்.

34) அ) தேசிய சேமிப்பு வங்கியானது உத்தரவு பெற்ற விசேட வங்கியொன்றாக கருதப்பட்டாலும் கூட ........................................ நடவடிக்கைகளில் ஈடுபட மத்திய வங்கி அனுமதியளித்துள்ளது.

ஆ) குறுங்கால (தற்காலிக) மேலதிகப்பற்று வசதிகளை .................................................................... பிணையின் மூலம் பெற்றுக் கொள்ள முடிவதுடன், நீண்டகால (நிரந்தர) மேலதிக பற்று வசதிகளை ............................................................ பிணையின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

35) பின்வரும் கூற்றுக்கள் தொடர்பில் சரி, பிழையைக் குறிப்பிடுக.

| கூற்று | ✓ / ✕ |
|---|---|
| 1. வரையறுத்த சொந்தக் கம்பனிகள் முன்விபரண செய்தியினை பத்திரிகையில் விளம்பரப்படுத்தத்தக்கன. | ................. |
| 2. *ATM* இயந்திரத்தில் பண வைப்பினை மேற்கொள்கையில் *ATM* அட்டை அவசியமில்லை. | ................. |
| 3. சகல இடர்களையும் ஏற்றுக்கொள்ளுதல் காப்புறுதியின் தொழிற்பாடாகும். | ................. |
| 4. சர்வதேச வர்த்தகத்தில் தீர்வை விலக்குகளுக்காக வார்நாமம் பயன்படுத்தப்படுவதுண்டு. | ................. |

36) அ) நிதி நிறுவன வகைப்படுத்தலின்படி இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஒரு ........................................................... சேமிப்பு நிறுவனமாகக் கருதப்படும் அதேவேளை முயற்சி மூலதனக் கம்பனிகள் (Venture Capital Companies) ............................................................. நிதி நிறுவனமாகக் காணப்படும்.

ஆ) காப்புறுதி ஒப்பந்தத் தொகை மிகப் பாரியளவில் காணப்படும் போது பல்வேறு காப்புறுதி நிறுவனங்கள் அந்நட்ட அச்சத் தொகையினை தம்மிடையே பகிர்ந்து பொறுப்பேற்றல் ........................................................................................................................ எனக் கருதப்படும்.

37) அ) முகாமைத்துவத்தின் அடிப்படை பணியாகவும், தீர்மானம் எடுத்தலின் மையப்பணியாகவும் .......................................................................................... தொழிற்படுவதனைக் காணமுடியும்.

ஆ) தொழிற்பிரிப்பும், சிறப்புத் தேர்ச்சியும் முகாமைத்துவத்தின் ............................................................ கருமத்துடன் தொடர்புடையதாகும்.

38) அ) ஒருவரால் தீர்மானம் எடுக்கப்பட்டு பின்பற்றுவோர் மூலம் அமுல்படுத்தப்படுவது ............................................................................ தலைமைத்துவம் என அழைக்கப்படுவதுடன், தீர்மானங்கள் சகலரினதும் பங்குபற்றுதல் மூலம் எடுக்கப்பட்டு பின்பற்றுவோர் மூலம் அமுல்படுத்தப்படுவது ..................................................... தலைமைத்துவம் என அழைக்கப்படும்.

ஆ) பணத்தினை மையப்படுத்திய ஊக்கப்படுத்தல், ................................................................... எனவும் சேமநலன்களினை மையப்படுத்திய ஊக்கப்படுத்தல் ........................................... எனவும் அழைக்கப்படுவதுண்டு.

39) உற்பத்தி நிறுவனமொன்றுடன் தொடர்புடைய பின்வரும் ஒவ்வொரு நடவடிக்கைகளுக்கும் பொருத்தமான பிரதான உற்பத்தி / செயல்முகாமைத்துவ கருமங்களை தரப்பட்டுள்ள இடைவெளியில் எழுதுக.

| நடவடிக்கைகள் | செயல்முகாமைத்துவக் கருமம் |
|---|---|
| 1) சரக்கிருப்பு மற்றும் தரக்கட்டுப்பாடுகள் | ............................................................ |
| 2) தேவைப்படும் மூலப்பொருள், மூலதனப் பொருள் பற்றிய முற்கூட்டிய மதிப்பீடு | ............................................................ |
| 3) உற்பத்தியினை நடாத்துவது பற்றிய தொழில்நுட்பம் | ............................................................ |
| 4) புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்தல் | ............................................................ |

40) அ) சந்தைப்படுத்தலில் விற்பனை எண்ணக்கருவானது மேம்படுத்தலை எடுத்துக் காட்டுமிடத்து, சந்தைப்படுத்தல் எண்ணக்கருவோ ........................................................................................ யும் ........................................................................................ யும் எடுத்துக்காட்டுகின்றது.

ஆ) முழுமைப்படைப்பு சந்தைப்படுத்தல் எண்ணக்கருவின் இரு கூறுகளாக .................................., ..................................................... என்பவற்றைக் குறிப்பிடுவர்.

➢ **41 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளை எழுதுக.**

41) சர்வதேச நுகர்வோர் அமைப்பினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நுகர்வோர் உரிமைகள் நான்கினைக் குறிப்பிடுக.

1) ........................................................................................................................................
2) ........................................................................................................................................
3) ........................................................................................................................................
4) ........................................................................................................................................

42) வியாபார வங்கிகளால் வணிகர்களுக்கு ஆற்றப்படும் நான்கு சேவைகளைக் குறிப்பிடுக.

1) ........................................................................................................................................
2) ........................................................................................................................................
3) ........................................................................................................................................
4) ........................................................................................................................................

43) பொதுவாக இடம்பெறும் போக்குவரத்து முறைகள் நான்கும் எவை?

1) ........................................................................................................................................
2) ........................................................................................................................................
3) ........................................................................................................................................
4) ........................................................................................................................................

44) ஆயுளுறுதிக் கட்டணத்தைத் தீர்மானிக்குகையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் யாவை?

1) ........................................................................................................................................
2) ........................................................................................................................................
3) ........................................................................................................................................
4) ........................................................................................................................................

45) எண்ணக்கருதிறன், மானிடத்திறன், தொழில்நுட்பத்திறன் என்பனவற்றுக்கு மேலாக முகாமையாளரிடம் இருக்க வேண்டிய விசேட திறன்கள் யாவை?

1) ........................................................................................................................................
2) ........................................................................................................................................
3) ........................................................................................................................................
4) ........................................................................................................................................

46) நிறுவனங்களில் திணைக்களப்படுத்தலுக்கு பயன்படுத்தப்படும் எவையேனும் நான்கு அடிப்படைகளைக் குறிப்பிடுக.

1) ........................................................................................................................................
2) ........................................................................................................................................
3) ........................................................................................................................................
4) ........................................................................................................................................

47) பின்வரும் குறியீடுகள் மூலம் இனங்காணப்படுவது யாது?

1)  ....................................................................................

2)  ....................................................................................

3)  ....................................................................................

4)  ....................................................................................

48) அ) சேவைச் சந்தைப்படுத்தல் கலவை மாறிகளாக செயன்முறை, மக்கள் / விற்பனைப்படை மற்றும் ........................................................... என்பன கருதப்பட முடியும்.

ஆ) இன்று மேற்குறிப்பிட்ட சேவைச் சந்தைப்படுத்தல் கலவை $3P$ க்கு நுகர்வோர் நோக்கிலான $3\,C$ க்கள் மூன்றினையும் முறையே குறிப்பிடுக.

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

49) சந்தை துண்டமாக்கப்படுவதற்குப் பயன்படுத்தப்படும் அடிப்படைக் காரணிகள் யாவை?

1) ..................................................................................................................................

2) ..................................................................................................................................

3) ..................................................................................................................................

4) ..................................................................................................................................

50) சிறந்த சந்தைத் துண்டமொன்று கொண்டிருக்க வேண்டிய பண்புகள் யாவை?

1) ..................................................................................................................................

2) ..................................................................................................................................

3) ..................................................................................................................................

4) ..................................................................................................................................

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

**Field Work Centre**

# தவணைப் பரீட்சை, நவம்பர்- 2016
# Term Examination, November - 2016

FWC

| தரம் :- 13 (2017) | வணிகக்கல்வி – II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

அறிவுறுத்தல்:-

- ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து, எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி I

01)

i) "உருவாக்கப்பட்ட சிறிது காலத்திலேயே சில வணிகங்கள் உன்னதமான வெற்றிகளை ஈட்டிக்கொள்வதுண்டு."

அ) வெற்றியடைந்து செல்லும் வணிக அமைப்பொன்றில் காணப்படக்கூடிய பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) வணிக அமைப்பின் அகச்சூழலில் தாக்கத்தினை ஏற்படுத்தும் பின்வரும் காரணிகளின் பலம், பலவீனம் ஆகியவற்றுக்கு ஒவ்வொரு உதாரணம் தருவதன் மூலம் விளக்குக.

- நிறுவன முகாமையாளர்
- நிறுவன ஊழியர்

ii) "வணிகமானது பல்வேறு காலகட்டங்களைக் கடந்து மின்னல் வேகத்தில் வளர்ச்சியடைந்து வருகின்றது."

அ) இன்றைய நவீன தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வளர்ச்சியினால் வணிகத் துறையில் ஏற்பட்ட பிரதான மாற்றங்களை சுருக்கமாக விளக்குக.

ஆ) "வணிகங்கள் பல்வேறுபட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யினும் மனித விருப்பங் களினாலேயே வணிகங்கள் பெருமளவு நீடித்து வாழ்வதுண்டு". மேற்படி கூற்றினை நியாயப்படுத்துவதற்கு வலிதான காரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக.

iii) "உற்பத்திப் பொருட்களைக் கட்புலத்தன்மை, பாவனை, பாவனைக்காலம் ஆகிய வேறுபட்ட மூலகங்களில் வகைப்படுத்த முடியும்"

அ) பாவனை அடிப்படையில் உற்பத்திப் பொருட்களை வகைப்படுத்திப் பாய்ச்சற்கோட்டுப் படத்தில் காட்டுக.

ஆ) வசதிப் பொருட்களுக்கும் (Convenience goods) கடைப்பொருட்களுக்கும் (Shopping goods) இடையிலான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

iv) "வணிக அமைப்புக்கள் ஒவ்வொன்றுக்கும் பொருளியல் சூழல் மிக இன்றியமையாத தாகும்."

அ) நிதிச்சேவையினை வழங்கும் வணிகங்களது நடவடிக்கையில் தாக்கத்தினை ஏற்படுத்தும் பொருளியல் சூழலின் கூறுகளைக் குறிப்பிடுக.

ஆ) வணிகர் ஒருவர் வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட கடனைத் திருப்பிச்செலுத்தத் தவறுமிடத்து அது வங்கிக்கும் வணிகருக்கும் ஏற்படுத்தக்கூடிய பாதிப்பினைக் குறிப்பிடுக.

v) "நுகர்வோரினதும் வணிகர்களினதும் பாதுகாப்பு நலன் உச்சமாக்கப்படும் வகையில் அரசின் பொருளாதாரக் கொள்கைகளும் சட்டதிட்டங்களும் உருவாக்கப்படுதல் முக்கிய தேவையாகும்"

அ) இலங்கையிலுள்ள வணிகங்களில் அரசின் செல்வாக்கு மூன்று மட்டங்களில் இடம்பெறுகின்றது. அம்மூன்று மட்டங்களையும் குறிப்பிடுக.

ஆ) அரச வணிகங்கள் மீது செல்வாக்குச் செலுத்தும் எவையேனும் ஐந்து வழிமுறை களைக் குறிப்பிடுக.

02)

i) “ஒவ்வொரு நுகர்வோரும் வணிகர்களும் இன்று நுகர்வோர் உரிமைகள், பொறுப்புக்கள் தொடர்பில் அறிந்திருத்தல் அவசியமான ஒன்றாகும்.”

அ) நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாப்பதில் வணிகர் ஒருவர் நிறைவேற்றவேண்டிய கடமைகள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) நுகர்வோர் உரிமைகளை உறுதிப்படுத்துவதன் மூலம் வணிகர் ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

ii) அ) பின்வருவன சில வரிவகைகளாகும்.

- பெறுமதிசேர்வரி
- மூலதன இலாப வரி
- கம்பனி வரி
- சுங்க வரி
- உற்பத்தி வரி
- வருமான வரி
- வங்கி வரவு வரி
- மது வரி

மேற்குறிப்பிட்ட வரிவகைகளினை “நேர்வரி”, “நேரில் வரி” ஆகிய இரு தலைப்புக்களின் கீழ் வகைப்படுத்திக் காட்டுக.

ஆ) “அரசானது பல்வகைப்பட்ட வரிகளை விதிக்கின்றது” இவ்வாறு வரிகளை விதித்தல் வணிகங்கள் மீது ஏற்படுத்தும் தாக்கத்தை சுருக்கமாக விளக்குக.

❖ **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி (iii), (iv), (v) ஆகிய வினாக்களுக்கு விடை தருக.**

2014 ஆம் ;ஆண்டில் றொகான், நவீன கணினி திருத்தும் நிறுவனம் ஒன்றினை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்திருந்தார். வாடிக்கையாளருக்கு மிகச்சிறந்த சேவையினை வழங்கி வந்ததனால், மிகக் குறுகிய காலத்தில் இவரது வணிகம் பிரபல்யமாகியது. இதனை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில் சிடான் என்பவரை இணைத்து வணிகத்தினைத் திறமையாக நடாத்த முற்படுகின்றார். ஆரம்பத்தில் மிகச் சுமூகமாக நடத்தப்பட்டாலும் தற்போது இருவருக்குமிடையில் சில பிணக்குகள் தோன்றியிருப்பதுடன், வாடிக்கையாளரது கட்டளைகளை முறையாகப் பூர்த்தி செய்யாததனால், அவர்களது முறைப்பாடுகளும் அதிகரித்து வருவதனைக் காணமுடிகின்றது.

iii) அ) றொகானால் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது வணிக வகை எது? இவ்வணிகத்தினை ஆரம்பிப்பதற்கு பிரயோகிக்கத்தக்க சட்டரீதியான தேவைப்பாடு எது?

ஆ) சிடானுடன் இணைந்து ஆரம்பித்த வணிகத்தில் எத்தகைய பிரதிகூலம் ஏற்படுமெனக் கருதுகின்றீர்?

iv) அ) இருவருக்குமிடையில் உடன்படிக்கை இல்லாதபோது ஏற்படக்கூடிய பின்வரும் பிணக்குகளுக்கு எத்தகைய தீர்வினை நீர் முன்வைப்பீர்?

- இலாபநட்டப் பகிர்வு
- நிர்வாகத்திற்கான சம்பளம்
- மூலதனத்திற்கான வட்டி
- மேலதிகக் கடன்களுக்கான வட்டி

ஆ) இருவருக்குமிடையில் உடன்படிக்கையொன்று தயார்செய்யப்பட்டிருப்பின் அதன் அனுகூலங்களைக் குறிப்பிடுக.

v) இவ்விருவருக்குமிடையிலான வணிகத்தை வரையறுத்த தனியார் கம்பனியாக மாற்றியமைப்பின், பொதுக்கம்பனியுடன் ஒப்பிட்டு இதன் பிரதிகூலங்களைக் குறிப்பிடுக.

03)

i) “பிரசித்தி பெற்ற தனிவியாபார முயற்சியொன்று, வாரிசுரிமை இல்லாத காரணத்தினால் அதன் நீடித்த வாழ்வில் பிரச்சினை தோன்றியுள்ளது. எனினும் அவ்வணிகம் நிலைக்க வேண்டும் என்பதில் வாடிக்கையாளரும் சமூகமும் மிக ஆர்வமாக உள்ளனர்”

அ) மேற்படி தனிவியாபார முயற்சியில் காணப்படும் பிரதிகூலங்கள் யாவை?

ஆ) மேற்படி வணிகத்தை வாங்குவதன் மூலம் வணிகர் ஒருவருக்குக் கிடைக்கும் அனுகூலங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

ii) அ) சந்தைக்கு இழுக்கப்பட்ட முயற்சியாண்மையின் அடிப்படைகளை நான்கு கூறுகளாக வகைப்படுத்திக் காட்டமுடியும். அவற்றை ஒழுங்கு முறையில் குறிப்பிடுக.

ஆ) மேலே நீர் குறிப்பிட்ட கூறுகளை ஏதேனும் உதாரணம் ஒன்றின் மூலம் விளக்குக.

iii) அ) இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்குச் சிறுவணிகங்களின் முக்கியத்துவத்தினைப் பரிசீலிக்க.

ஆ) சிறு வணிகங்களை இனங்காண்பதற்கான நியதிகள் இரண்டினையும், அவை ஒவ்வொன்றுக்கும் இரண்டு உதாரணங்களைத் தந்து குறிப்பிடுக.

iv) “இன்று வங்கிகளால் வழங்கப்படும் இலத்திரனியல் அட்டைகள் (Electro card) யாவுமே வரவட்டைகளாக (Debit card) தொழிற்படுகின்றன.

அ) வரவட்டைகளைப் பயன்படுத்துவதன் மூலம் வாடிக்கையாளருக்குக் கிடைக்கும் அனுகூலங்கள் யாவை?

ஆ) இன்று வாடிக்கையாளர்கள் தன்னியக்க இயந்திரங்களை (ATM) நாடாமல், வங்கிக் கருமபீடத்திற்கே தமது சேவைகளுக்கு செல்கின்றதைக் காணமுடிகின்றது. இவ்வாறு ATM இயந்திரங்களை பயன்படுத்தாமைக்குரிய காரணங்கள் யாவை?

v) அ) காப்பறுதி ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்படுவதற்கான அடிப்படைத் தேவைப்பாடுகள் யாவை?

ஆ) அண்மைக்காலமாக இலங்கையில் வீதி விபத்துக்கள் அதிகரித்துச் செல்லும் போக்கினைக் காணக்கூடியதாக உள்ளது. இதனைத் தடுப்பதற்கான தீர்வுகளினை முன்வைக்குக.

04)

i) அ) வடக்கிற்கான புகையிரதப் பாதை அமைக்கப்பட்டதனைத் தொடர்ந்து, வடபகுதி வணிகத்துறையில் ஏற்பட்ட மாற்றங்களை விளக்குக.

ஆ) வினைதிறனான தொடர்பாடலின் பண்புகள் நான்கினைக் குறிப்பிட்டு விளக்குக.

ii) அ) பாடசாலை அதிபர் ஒருவர் க.பொ.த. உயர்தர இறுதிப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களையும், அவர்தம் பெற்றோரையும் இறுதிநேர பரீட்சை ஆயத்தங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக அழைக்கின்றார். இக்கலந்துரையாடலில் அதிபர் கருத்தில் கொள்ளவேண்டிய நான்கு அடிப்படைக் காரணிகளை எழுதுக.

ஆ) மேற்படி வாய்மூலக் கலந்துரையாடலின் மட்டுப்பாடுகள் அல்லது பிரச்சினைகள் நான்கினைக் குறிப்பிடுக.

iii) அ) நிகழ்காலச் சந்தையில் சிறப்புச் சந்தை முறையானது அதிகரித்துச் செல்லும் போக்கினைக் காணக்கூடியதாக இருப்பினும் நகர, கிராமப் பகுதிகளில் காணப்படும் வாராந்தச் சந்தைகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. இவ்வாராந்தச் சந்தையிலிருந்து நுகர்வோர் அடைந்துகொள்ளும் அனுகூலமான நிலைமைகள் எவை?

ஆ) உள்ளூர் விவசாயிகள் பெரும் சிரமங்களின் மத்தியிலும் தமது விளையாட்டுப் பொருட்களைச் சந்தைகளுக்கு எடுத்துச் சென்றாலும் அங்கு போதிய விலை கிடைப்பதில்லை எனக் கூறுகின்றனர். இவ்வாறு விவசாய உற்பத்திகளுக்கு போதிய விலை கிடைக்காமைக்குரிய காரணங்கள் யாவை?

iv) உள்நாட்டு கைப்பணிப் பொருட்களது சந்தையில் பிரபல்யம் பெற்று நிலையான இடத்தினைப் பிடித்திருக்கும் தனது உற்பத்திகளை வெளிநாட்டுச் சந்தைகளுக்கு அனுப்புவதற்கு உற்பத்தியாளர் ஒருவர் எண்ணியுள்ளார். அதனூடாக அவருக்குப் பெறக்கூடிய அனுகூலங்களையும் பிரச்சினைகளையும் விளக்குக.

v) அ) இலங்கை சுங்கத் திணைக்களத்தின் நான்கு கருமங்களைக் குறிப்பிடுக.

ஆ) சர்வதேச வியாபாரத்திற்கு இருக்கும் தடைகளை இழிவுபடுத்தி அதன் இருப்பு நிலையை உறுதிப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டிருக்கும் வலய ரீதியான வியாபார ஒப்பந்தங்கள் இரண்டையும், அமைப்புக்கள் இரண்டையும் குறிப்பிடுக.

## பகுதி II

05)

i) ''வரையறுக்கப்பட்ட வளங்களை வினைதிறனாகப் பயன்படுத்தி விளைதிறனாக (பயனுறுதி) இலக்குகளை அடைதல் முகாமைத்துவத்தில் முக்கிய எண்ணக்கருவாகும்''

அ) வினைதிறன் (Efficiency), விளைதிறன் (Effectiveness) ஆகிய எண்ணக்கருக்களைத் தனித்தனியே விளக்குக.

ஆ) வினைதிறன், விளைதிறனை அளவிடுவதற்கான நியதிகளைத் தனித்தனியே விளக்குக.

ii) ''இன்று முகாமைத்துவமானது சகல துறைகளிலும் வேண்டப்படும் ஒன்றாகும்''

அ) முகாமைத்துவம் இன்று முக்கியத்துவம் பெற்று வருவதற்குரிய காரணங்கள் யாவை?

ஆ) முகாமையாளரிடம் எதிர்பார்க்கப்படும் பொதுவான திறன்கள், மற்றும் விசேட திறன்கள் என்பவற்றுக்கு மேலாக சிறந்த முகாமைத்துவச் செயன்முறைக்கு முகாமையாளரிடம் தேவைப்படும் ஏனைய அம்சங்கள் யாவை?

iii) அ) ''றொபேட் L. கேட்ஸ்'' என்ற அறிஞரால் முன்வைக்கப்பட்ட மானிடத்திறன் என்பதனால் கருதப்படுவது யாது?

ஆ) மேற்குறித்த மானிடத்திறனை அடிப்படை முகாமைத்துவ தொழிற்பாடுகளுடன் தொடர்புபடுத்தி எழுதுக.

iv) முகாமையாளர் ஒருவரின் தீர்மான வகிபாகம் என்பதன் கீழ் அவரால் ஆற்றப்படும் நான்கு நடவடிக்கைகளை உதாரணங்களுடன் குறிப்பிடுக.

v) அ) ''ஒரு நல்ல திட்டமிடல் சில தத்துவங்களுக்கு உட்பட்டே வகுக்கப்படுவதுண்டு'' அத்தகைய திட்டமிடல் தத்துங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) ''முகாமையாளர்கள் தீட்டப்படும் திட்டமிடல் சில சமயங்களில் தோல்வியடைவதுண்டு'' திட்டமிடல் தோல்வியடைவதற்குரிய காரணங்கள் யாவை?

06)

i) ''முகாமைத்துவத்தில் அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் கையளித்தல் என்பது மிக அவதானமாக நிறைவேற்ற வேண்டிய ஓர் கடமையாகும்''

அ) அதிகாரம் (Authority), பொறுப்பு (Responsibility) ஆகிய எண்ணக்கருக்களை தனித்தனியே விளக்குக.

ஆ) உயர்மட்ட முகாமை அதிகார கையளிப்பினை மேற்கொள்வதன் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடிய அனுகூலங்கள் யாவை?

ii) ''நிறுவன இலக்குகள் நோக்கங்களை வினைதிறனாகவும், பயனுறுதியாகவும் நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு தனிநபர்களின் அல்லது குழுக்களின் நடத்தையின் மீது தாக்கத்தினை ஏற்படுத்தும் இயலுமை தலைமைத்துவம் என்பதாகும்''

அ) ''நிறுவனமொன்றின் வெற்றிக்கு சிறந்த தலைமைத்துவமொன்று அத்தியாவசியமான தாகும்'' இக்கருத்தை காரணங்கள் தந்து நியாயப்படுத்துக.

ஆ) பின்வருவனவற்றுக்குச் சிறுகுறிப்பு எழுதுக.

- ஊழியர்சார் முகாமைத்துவ சாயல் (Employee oriented Leadership style)
- தொழில்சார் முகாமைத்துவ சாயல் (Task oriented Leadership style)

iii) "சிலோன் டெக்ஸ்" - ஆடை உற்பத்தித் தொழிற்சாலையானது மிக முன்னணி ஆடை உற்பத்தி நிறுவனமாக திகழ்ந்து வந்ததெனினும் மிக அண்மைக்காலத்தில் அதன் உற்பத்தியில் வீழ்ச்சி தென்படுவதுடன், தரத்திலும் குறைபாடு இருப்பதாக வாடிக்கையாளர் முறையிடுகின்றனர். எனினும் சந்தையில் இதன் வியாபாரக் குறிக்கு இருக்கின்ற தனித்துவம் காரணமாக உற்பத்தியினை உயர்த்துவதற்கு அதன் முகாமையாளர் திரு. வசந்தரூபன் நடவடிக்கை எடுக்க முற்படுகின்றார்.

அ) உற்பத்தியினை அதிகரிப்பதற்காக ஊழியர்களை ஊக்கப்படுத்தவதற்காக பின்பற்றக் கூடிய ஊக்குவித்தல் முறைகள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) மேற்குறிப்பிட்ட ஊக்குவித்தல்களை வழங்குவதன் மூலம் சிலோன் டெக்ஸ் அடைய எதிர்பார்க்கும் அனுகூலங்களைக் குறிப்பிடுக.

iv) "நியமங்கள் இன்றி ஒருபோதும் கட்டுப்பாட்டினை மேற்கொண்டுவிட முடியாது"

அ) மேற்படிக் கூற்றின் கருத்தினை நியாயப்படுத்துக.

ஆ) கட்டுப்பாட்டுச் செயன்முறை நிறுவனங்களுக்கு ஏன் முக்கியத்துவமானது என்பதற்குரிய நான்கு காரணங்களைக் குறிப்பிடுக.

v) அ) நிறுவனங்களிலே பயன்படுத்தப்படும் முகாமைத்துவ கட்டுப்பாட்டு முறைகள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) உற்பத்திப்பொருள் தொடர்பான குறைபாடுகளைச் சீர்செய்வதற்கு "முந்திய முன்னூட்டப்பட்ட கட்டத்தில் (Feed forward controlling) எடுக்கக்கூடிய இரண்டு நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

07)

i) "வணிகப் பட்டதாரியான திரு. சஞ்சீவன் என்பவர் தொழில்முயற்சி ஒன்றினை ஆரம்பிப்பது தொடர்பில் தீர்மானம் எடுக்கின்றார். இருந்தும் இவ் உற்பத்தி தொழில்முயற்சியினை கட்டளை உற்பத்தியாகவா அன்றி பாய்ச்சல் உற்பத்தியாகவா ஆரம்பிக்க வேண்டும் என்பது தொடர்பில் குழப்பமடைந்துள்ளார்"

அ) பொருத்தமான உற்பத்தி முறை ஒன்றினைத் தெரிவு செய்கையில் சஞ்சீவன் கருத்தில் எடுக்கவேண்டிய காரணிகள் யாவை?

ஆ) பாய்ச்சல் உற்பத்தியுடன் (Flow Production) ஒப்பிடுமிடத்து கட்டளை உற்பத்தியில் (Order production) நீர் காணக்கூடிய அனுகூலங்கள் யாவை?

ii) "எதனை உற்பத்தி செய்தல் வேண்டும் என உற்பத்தி திட்டமிடலில் தீர்மானித்த பின்னர், அதனை எவ்வாறு உற்பத்தி செய்தல் வேண்டும் என உற்பத்திப் பொறியியல் தீர்மானிக்கின்றது."

அ) உற்பத்திப் பொறியியலில் நிறுவனங்கள் கருத்தில் கொள்ளும் விடயங்கள் எவை?

ஆ) நவீன தொழில்நுட்ப பிரயோகத்தினால் நிறுவனங்களுக்குக் கிடைக்கும் நான்கு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

iii) "மறுகட்டளை மட்டத்தினைத் தீர்மானிக்கையில் முதன்மைக்காலம் (lead time) என்பது பிரதானமாகக் கருத்தில் கொள்ளப்படுவதுண்டு"

அ) மறுகட்டளை மட்டம் என்பதனால் கருதப்படுபவது யாது?

ஆ) முதன்மைக்காலம் என்பதனை விளக்கி அதில் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக.

iv) அ) தரக்கட்டுப்பாட்டினை வரையறுப்பதுடன் வணிக நிறுவனங்களுக்கு தரக்கட்டுப்பாட்டின் முக்கியத்துவங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) பொதுவாக நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் தரக்கட்டுப்பாட்டு நுட்பமுறைகள் நான்கினைக் குறிப்பிடுக.

v) அ) அயல்நாட்டிலிருந்து இலங்கைக்கு வருகை தந்துள்ள வீட்டு மின் உபகரண உற்பத்தி நிறுவனமாகிய "அஜித் அன்கோ" தனது தொழிற்சாலைக்குப் பொருத்தமான இட அமைவினைத் தெரிவுசெய்யும் போது கருத்தில் கொள்ளவேண்டிய நான்கு காரணிகளைக் குறிப்பிட்டுச் சுருக்கமாக விளக்குக.

ஆ) பின்வரும் நிலைய தள அமைப்பு முறைகளைச் சுருக்கமாக விளக்குக.

- உற்பத்திப்பொருள் தள அமைப்பு
- நிலையான இட தள அமைப்பு

08)

i) இலாபநட்டமற்ற புள்ளியில் உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை 10000 ஆகும். ஒரு அலகின் விற்பனை விலை ரூபா 100 ஆகும். ஒரு அலகுக்கான மாறும் கிரயம் ரூபா 40 ஆகும்.

அ) இவ் உற்பத்திக்கான மொத்த நிலையான கிரயத்தைக் கணிப்பிடுக.

ஆ) ரூபா 60000 இனை இலாபமாக உழைப்பதற்கு உற்பத்தி செய்யவேண்டிய மொத்த அலகுகளின் எண்ணிக்கை யாது?

ii) சந்தைப்படுத்தலின் முக்கியத்துவத்தினை வணிகருக்கும் நுகர்வோருக்கும் தனித்தனியே குறிப்பிடுக.

iii) பியு, தனு, யுகி ஆகியோர் ஆடை உற்பத்தியிலும் வடிவமைப்பிலும் ஈடுபட்டுள்ள மூன்று வணிகர்கள் ஆவர்.

பியு : எப்பொழுதும் தனது விருப்பத்திற்கு முன்னுரிமை கொடுத்து ஆடைகளை வடிவமைத்து விளம்பரப்படுத்தலின் ஊடாக அவற்றை விற்பனை செய்ய முயற்சிக்கின்றார்.

தனு : தரமான துணிகள் மற்றும் இதர பொருட்களை கொண்டு, தையல்வேலை செய்பவர்களூடாக ஆடைகளைப் புதிதுபுதிதாக வடிவமைத்து நியாயமான விலையில் விற்பனை செய்ய முயற்சிக்கின்றார்.

யுகி : வாடிக்கையாளரின் தேவைகள், விருப்பங்கள் மற்றும் அவர்களின் கொள்வனவுச் சக்தி ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு ஆடைகளை வடிவமைத்து விற்பனை செய்ய முயற்சிக்கின்றார்.

அ) மேற்குறிப்பிட்ட மூன்று ஆடை உற்பத்தியாளர்களினாலும் எவ்வகையான சந்தைப் படுத்தல் எண்ணக்கருக்கள் பின்பற்றப்பட்டன என்பதை தனித்தனியாக விளக்குக.

ஆ) மேற்குறித்த ஆடை உற்பத்தியாளர்களில் எவரொருவர் பின்பற்றும் எண்ணக்கரு நீண்டகாலம் சந்தையில் நிலைத்திருக்கச் செய்யும் என்பதனைக் காரணங்களுடன் விளக்குக.

iv) "இன்று இலங்கை உலகில் முன்னணி ஆடை உற்பத்தி நாடாகும்"

அ) இலங்கையின் ஆடை உற்பத்திச் சந்தையில் பல துண்டங்கள் காணப்படுகின்றன. சந்தைப்படுத்துவோர் ஆடைச் சந்தையினை துண்டங்களாக்குவதற்கு பயன்படுத்தப்படும் அடிப்படைகளை உதாரணங்களுடன் விளக்குக.

ஆ) சந்தை துண்டமாக்கப்படுவதனால் வணிகர்களுக்குக் கிடைக்கும் நான்கு அனுகூலங் களைக் குறிப்பிடுக.

v) "வணிக நிறுவனங்கள் எதிர்பார்க்கும் நோக்கங்களினை அடைந்துகொள்வதற்கு செயற் படுத்தப்படும் உபாய மாறிகளே சந்தைப்படுத்தல் கலவை என்பதாகும்" வணிகரது பார்வையில் பொருள் சந்தைப்படுத்தல் கலவை மாறிகளைக் குறிப்பிடுவதுடன் அவற்றில் அடங்கும் கூறுகள் இவ்விரண்டினைக் குறிப்பிடுக.